
## எண்ணற்ற நலத்திட்டங்களால் மக்களைக் கவர்ந்து, இந்திய அரசியலில் அரிதான தலைவராகத் திகழ்கிறார்!

# அமைதியாக வரலாறு படைத்து வருகிறார் மு.க.ஸ்டாலின்!

## ‘திங்க் சவுத்’ யு டியூப் சேனல் பாராட்டு!




**சென்னை, அக். 23 -**

**எண்ணற்ற நலத்திட்டங்களால் மக்களைக் கவர்ந்து, இந்திய அரசியலில் அரிதான தலைவராகத் திகழ்கிறார் என்றும், அமைதியாக வரலாறு படைத்து வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்றும் ‘திங்க் சவுத்’ யு டியூப் சேனல் வீடியோ செய்தியில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.**

65 வயதில் கட்சித் தலைவராகி 68 வயதில் முதலமைச்சரான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆச்சர்யப் படத்தக்க வரலாறு என்று குறிப்பிட்டு ‘திங்க் சவுத்’ என்கிற ‘யூ டியுப்’ சேனல் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பற்றி பாராட்டி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்தப் பதிவில் வெளியான சிறப்புச் செய்தி வருமாறு:-

பெரும்பாலோர் நினைத்தார்கள் - அவர் மிகவும் தாமதமாகிவிட்டார். வயது ஆகிவிட்டது. கலைஞரின் நிழலில் இருந்து வெளியே வர முடியாது என்று. ஆனால் அந்த நாளிலிருந்து, அதாவது 1984க்குப் பிறகு) மு.க.ஸ்டாலின் ஒரு தேர்தலிலும் தோல்வியடைந்ததில்லை. இந்தியா முழுவதும் எதிர்க்கட்சித் தலைவர்கள் பா.ஜ.க.வின் முன்னிலையில் தலை வணங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்திருந்த நேரத்தில், ஸ்டாலின் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தார்.

கலைஞர் 44வது வயதில் முதல்வராகியிருந்தார். ஸ்டாலின் 68 வயது வரை காத்திருக்க வேண்டியிருந்தது. தசாப்தங்களாகக் காத்திருந்தார். ஆனால் அவரது நேரம் வந்தபோது, பொறுமையாலும் வெல்ல முடியும் என்பதை ஸ்டாலின் நிரூபித்தார். பின்னர் வந்தது 2018. கலைஞரின் மறைவு. 50 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் உயர்ந்த தலைவராக இருந்தவர்.

அனைவரும் குழப்பம் ஏற்படும் என கணித்தனர். பிரிவுகள், அதிகாரப் போட்டிகள் உருவாகும் என எதிர்பார்த்தனர். ஆனால் ஸ்டாலின் இந்திய அரசியலில் அரிதாக நிகழும் ஒரு செயலைச் செய்தார். அவர் தி.மு.க.வை ஒருங்கிணைத்தார். பிரிவு இல்லை, கிளர்ச்சி இல்லை, குழப்பம் இல்லை. கலைஞர் உயிருடன் இருந்தபோதே இருந்த சின்னச் சின்ன பிளவுகள் கூட சீரானது.

### தந்தைக்கு துரோகம் செய்யாதவர்!

அது பொறுமையின் அடையாளம், ஒழுக்கத்தின் அடையாளம், அமைதியான ஆட்சியின் அடையாளம். அவரது கதை மனிதநேயமாகத் தோன்ற வைப்பதற்கான காரணம் இதுதான் — மற்ற வாரிசுகளைப் போல அல்லாமல், ஸ்டாலின் ஒருபோதும் தந்தைக்குத் துரோகம் செய்யவில்லை. தந்தையிடத்தில் அவர் காட்டிய நம்பிக்கையும் பெருமையும், அவரது மகனிடமும் அதேபோல காணப்படுகிறது.

### தந்தையின் மகிழ்ச்சிக்காகவே உழைக்கிறார் உதயநிதி!

அவரது மகன் தன் புகழுக்காக அல்ல, தந்தையின் மகிழ்ச்சிக்காகவே உழைக்கிறார். அது தான் எனக்குத் தோன்றுகிறது. இந்த பந்தம் மிகவும் அசாதாரணமானது. அரசியலில் குடும்பங்கள் சிதறும் இடத்தில், ஸ்டாலினின் குடும்ப பந்தம் ஒளிர்கிறது என்று தான் கூறவேண்டும். 65 வயதில் தலைவராக ஆன மு.க.ஸ்டாலின். 68 வயதில் முதல்வராக ஆனார்.

### தமிழ்நாட்டின் பெருமையைக் காத்தார்!

தி.மு.க. தலைவராகப் பொறுப்பேற்றதிலிருந்து, ஒரு தேர்தலிலும் அவர் தோல்வியடைந்ததில்லை. அவர் தனது கட்சியை ஒன்றிணைத்தார், கூட்டணிகளைப் பிளவு இல்லாமல் சமநிலைப்படுத்தினார், நலத்திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றினார், முக்கியமாக, தமிழ்நாட்டின் பெருமைகளைத் தயக்கமின்றி காத்தார்.

மேலும் தந்தை கலைஞரின் நினைவுகளை கற்களிலும், புத்தகங்களிலும், திட்டங்கள் மூலமாகவும், மக்களின் வாழ்க்கை நிலையிலும் என அனைத்திலும் பதித்தார். அவர் 65 வயதில் கட்சித் தலைவராக ஆனார்.

பலர் நினைத்தார்கள் அவர் தாமதமாக கட்சிப் பொறுப்புக்கு வந்துள்ளார். வயது ஆகிவிட்டது, கலைஞரின் நிழலில் இருந்து வெளியே வர முடியாது என்று. ஆனால் அந்த நாளிலிருந்து, மு.க.ஸ்டாலின் ஒரு தேர்தலிலும் தோல்வியடைந்ததில்லை. 2019 பாராளுமன்றத் தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல், 2022 உள்ளாட்சி தேர்தல், 2024 லோக்சபா தேர்தல், மாநிலத்தின் ஒவ்வொரு இடைத்தேர்தலிலும் கூட அவர் வெற்றி பெற்றார்.

### அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தார்!

எதிர்க்கட்சித் தலைவர்கள் பா.ஜ.க.வின் முன்னிலையில் தலைவணங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்திருந்த நேரத்தில், ஸ்டாலின் அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தார். அவர் நரேந்திர மோடி அரசுக்கு எதிரான மிக வலிமையான, தொடர்ந்து செயல்படும் சவாலாக எழுந்தார்.

ஆனால் ஒரு திருப்பம். கலைஞர் 44 வயதில் முதல்வராக ஆனார். ஸ்டாலின் 68 வயது வரை காத்திருந்தார். அவர் தசாப்தங்களாக காத்திருந்தார், மற்றவர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானவர். “கலைஞரின் மகன்” என்று மட்டும் அழைக்கப்பட்டார். ஆனால் நேரம் வந்தபோது, அவர் பொறுமையாலும் வரலாற்றை வென்றார். அவர் தி.மு.க. இளைஞர் அணி மூலம் தனது அரசியல் பணியைத் துவங்கினார். அடித்தளத்தில் இறங்கி கட்சிக்காகப் பணியாற்றினார். அவசர நிலையின் போது கைது செய்யப்பட்டார், வழக்குகளைச் சந்தித்தார், சிறையிலும் இருந்தார்.

### சிங்கார சென்னை திட்டத்தை ஆரம்பித்தார்!

1996 ல் அவரது முதல் பெரிய முன்னேற்றம். அவர் சென்னை மாநகர மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேயராக, “சிங்கார சென்னை” என்ற திட்டத்தை ஆரம்பித்தார். புது பாலங்கள், கழிவுநீர் சீரமைப்பு, பூங்காக்கள், பள்ளி மேம்பாடு என நகரத்தை மாற்றியமைத்தார். இன்றும் சென்னைப் பாலங்களில் பலவும் ஸ்டாலின் மேயராக இருந்த காலத்தில் கட்டப்பட்ட திட்டங்களே. அவை இல்லையென்றால், சென்னை மாநகரமும் பெங்களூரு போன்று போக்குவரத்துப் பிரச்சினையில் சிக்கியிருக்கும்.

### திறமையான நிர்வாகியாக செயல்பட்டு தனித்து நின்றார்!

பின்னர் ஊரக வளர்ச்சித் துறையின் அமைச்சராக இருந்து, பெண்களின் சுய உதவி குழுக்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள் என பரவலாக பணியாற்றினார். சிறிது சிறிதாக, அடுக்கடுக்கான சாதனைகளால் ஸ்டாலின் தனது பெயரை உருவாக்கினார். “கலைஞரின் மகன்” என்று மட்டும் அல்ல, தன்னளவில் திறமையான நிர்வாகியாக செயல்பட்டு தனித்து நின்றார். பின்னர் வந்தது 2018ல் பெரும் திருப்பம். தமிழ்நாட்டில் 50 ஆண்டுகளாக மாபெரும் தலைவராகத் திகழ்ந்த கலைஞர் மறைவு எய்தினார்.

### பொறுமையின் அடையாளம்!

அனைவரும் குழப்பம் ஏற்படும் என்றும் அதிகாரப் பிரச்சினை ஏற்படும் என்றும் எதிர்பார்த்தனர். ஆனால் ஸ்டாலின் இந்திய அரசியலில் யாரும் எதிர்பாராதவாறு தி.மு.க.வை ஒன்றிணைத்தார். பிளவு இல்லை, கிளர்ச்சி இல்லை, குழப்பம் இல்லை. அது பொறுமையின் அடையாளம், ஒழுக்கத்தின் அடையாளம், அமைதியான ஆட்சியின் அடையாளம் எனத் திகழலானார்.




முதல்வராகி அவர் நலத்திட்டங்களை வழங்கத் தொடங்கினார். அவ்வளவு எளிதில் அவர் முதல்வராகி விடவில்லை. பள்ளி மாணவர்களுக்கு இலவச காலை உணவு, பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், மாணவர்களுக்கு கல்வி உதவி, ஒவ்வொரு குடும்பத்தையும் தொடும் நலத்திட்டங்கள். வரிசையாக வந்தன. “நான் முதல்வன்” — மாணவர்களுக்கு எதிர்காலத் திறன்களை அளித்தது. “பசுமை தமிழ்நாடு” திட்டம் கோடிக்கணக்கான மரங்களை நடுவதற்கு வழிவகுத்தது.

### மிகுந்த துணிச்சலான முடிவு!

மிகுந்த துணிச்சலான முடிவாக, அனைத்து சாதியினரும் கோவிலில் பூசாரிகளாக நியமிக்கப்பட்டனர். நூற்றாண்டுகளாக இருந்த மரபுகளை சமத்துவத்துக்காக உடைத்தது. “மக்கள் முதல்வர்” திட்டம். பொதுமக்களின் மனு நேரடியாக முதல்வரின் அலுவலகத்திற்குச் சென்று தீர்வு பெற்றது. அரசு அவர்களைக் கேட்கிறதென்று மக்கள் முதன்முறையாக, உணர்ந்தனர்.




ஸ்டாலின் அரசு பெரும் முதலீடுகளை ஈர்த்தது, வேலைவாய்ப்புகளை உருவாக்கியது, மாநிலத்தின் நிதி நிலையை மேம்படுத்தியது. அவரது எதிரிகளுக்கே அவர் திறம்பட ஆட்சி நடத்துவதை ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை. தற்போது உள்ளது. அனைவரும் அவர் பா.ஜ.க.வின் அழுத்தத்திற்கு தலைவணங்குவார் என்று நினைத்தபோது, அவர் தலைநிமிர்ந்தார். இது மிகப்பெரிய ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது.

மொழி, சமத்துவம், மாநில உரிமை என ஒவ்வொன்றிலும் அவர் உறுதியுடன் நின்றார்.

### வலிமையாக நேராக நின்றார்!

தந்தை பெரியாரின் கொள்கைகளை அவர் ஒருபோதும் விட்டுக் கொடுக்க வில்லை.

இன்றைய இந்தியாவில், வளைவதே வழக்கமாக இருக்கும் போது, ஸ்டாலின் வலிமையாக நேராக நிமிர்ந்து நின்றார். மற்ற வாரிசுகளைப் போல அல்லாமல், ஸ்டாலின் தந்தைக்கு ஒருபோதும் துரோகம் செய்யவில்லை. பல ஆண்டுகள் காத்திருந்தார். ஆனால் தனது தந்தை கலைஞரை ஒருபோதும் அவர் ஏமாற்றவில்லை. கலைஞர் மறைந்த பின், தமிழ்நாடு அவரை மறக்காதபடி ஸ்டாலின் உறுதி செய்தார்.

கலைஞர் நினைவிடம் முதல் கலைஞர் குடும்பத் திட்டங்கள் வரை, நூலகங்கள், நலத்திட்டங்கள் வரை, அவர் தந்தையின் நினைவை மாநிலத்தின் ஆன்மாவில் பதித்தார். அவர் தந்தையின் நினைவுகளை கொள்கைகளாக மாற்றினார். தந்தை மீதான அன்பை ஆட்சியாக மாற்றினார்.

இப்போது அவரது மகன் உதயநிதி மீதான அன்பு அதேபோல தெரிகிறது. இது அரசியல் மட்டும் அல்ல; இது தந்தைக்கானதும்கூட. ஸ்டாலின் தனது மகனிடம் காட்டும் நம்பிக்கையும் பெருமையும் அபூர்வமானது.

தமிழ் ரூபாய் சின்னத்தைப் பயன்படுத்தும் முடிவு சிலரால் சண்டையாகக் கூறப்பட்டாலும், ஆதரவாளர்கள் அதை தமிழ்நாட்டின் தனித்துவம், சுயமரியாதையின் சின்னமாகக் கொண்டாடினர். அரசு கடன், நிதி நிலைமை குறித்த எச்சரிக்கைகள் இருந்தாலும், ஆட்சியின் சுமைகளை சமாளித்தவர்.

ஜெயலலிதாவின் கதை கவர்ச்சி மற்றும் பயத்தின் கதை என்றால், ஸ்டாலினின் கதை, பொறுமையின் கதை, முதிர்ச்சியின் கதை, உறுதியின் கதை. அவரது மரபு இன்னும் எழுதப்படுகிறது. ஆனால் அவர் ஏற்கனவே நிரூபித்துள்ளார், காத்திருப்பது பலவீனம் அல்ல, அது ஒரு வலிமை.

இப்போது கேள்வி ஸ்டாலின் திராவிட இயக்கத்தின் கடைசி தீபம் தாங்குபவரா, அல்லது புதிய திராவிட காலத்தின் முதல் தலைவரா?

வரலாறு தான் முடிவெடுக்கும்.

### பொறுமையால் - உறுதியால் வென்றவர்!

ஆனால் ஒரு விஷயம் உறுதி 65 வயதில் அவர் ஒரு தயக்கம் கொண்ட வாரிசு அல்ல. 68 வயதில் அவர் கலைஞரின் மகனாக மட்டுமல்ல; தமிழ்நாட்டின் முதல்வராக ஆனார். அதுவே மு.க.ஸ்டாலின் கதையாகும் பொறுமையால் வென்றவர், உறுதியால் வென்றவர் ஸ்டாலின்.

இவ்வாறு அந்த வீடியோ வெளியாகி உள்ளது.

### தந்தையின் நினைவை மாநிலத்தின் ஆன்மாவில் பதித்தார்!



**கலைஞர் நினைவிடம் முதல் கலைஞர் குடும்பத் திட்டங்கள் வரை, நூலகங்கள், நலத்திட்டங்கள் வரை, அவர் தந்தையின் நினைவை மாநிலத்தின் ஆன்மாவில் பதித்தார். அவர் தந்தையின் நினைவுகளை கொள்கைகளாக மாற்றினார். தந்தை மீதான அன்பை ஆட்சியாக மாற்றினார்.**